DINAMANI 24 FEB 09

# ஈஷா யோகா மையம் சார்பில் மகா சிவராத்திரி விழா

*திருச்சி, பிப். 23:* ஈஷா யோகா மையத்தின் சார்பில் திருச்சியில் மகா சிவராத்திரி விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

திருச்சி சிந்தாமணி அண்ணா சிலை அருகிலுள்ள தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் மகா சிவராத்திரி விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழா நடைபெறும் அரங்கின் உள்ளே செல்லும் பாதையில், சத்குரு ஜக்கி வாசுதேவின் படம் வைக்கப்பட்டிருந்தது. சிவராத்திரி விழாவுக்குச் சென்றவர்கள் அவரது படத்துக்கு பாத தர்ப்பணம் செய்துவிட்டு உள்ளே சென்றனர்.



ஈஷா யோகா மையம் சார்பில், வெள்ளியங்கிரிமலையில் திங்கள்கிழமை நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில் சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசுவதை, திருச்சியில் தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திரை மூலம் பார்க்கும் பொதுமக்கள்.

இதைத் தொடர்ந்து, குருபூஜையுடன் சிவராத்தரி விழா தொடங்கியது. பின்னர், வெள்ளியங்கிரிமலையில் உள்ள ஈஷா யோகா மையத்தில் நடைபெறும் சிவராத்திரி விழாவை, திருச்சியில் காணும் வகையில் 3 இடங்களில் திரைகள் வைக்கப்பட்டிருந்தன.

குரு பூஜைக்குப் பின்னர் நாத, நடன ஆராதனைகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து, சத்குரு ஜக்கி வாசுதேவ் சிவராத்திரி அருளுரை வழங்கினார். இதையடுத்து இரவு 9 மணி முதல் தியானமும் நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை அதிகாலை 6 மணி வரை சிவராத்திரி விழா நடைபெற்றது. விழாவில் பங்கேற்றவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.